இணைப்பு I.

[638 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 708–க்கான விடையைக் காண்க.]

(அ), (ஆ), (இ): மதுரை நகர் அபிவிருத்திக்கென தயாரிக்கப்பட்ட ஓர் ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டத்தில் வீட்டு வசதி, குடிநீர் வசதி, வடிகால் வசதி, போக்குவரவு மேம்பாடு, வணிகக்கூடங்கள் அமைத்தல் ஆகியன உள்ளடங்கி உள்ளன, மேற்குறிப்பிட்ட திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 775.85 இலட்சம் ஆகும். இத்தொகையை மத்திய மாநில அரசுகள் 50:50 விகிதத்தில் மதுரை நகர உள்ளூர் திட்டக்குழுமத்திற்கென வழங்கும்.

2. நிறைவேற்றப்பட இருக்கும் திட்டங்களின் பெயர்களும் அவற்றிற்கான மொத்த குறிப்பிட்ட தொகையும் நிறைவேற்றப்படும் காலமும் திட்டங்களை மேற்கொள்ளவிருக்கும் துறையின் பெயர்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

வ. எண்.	துணைத்திட்டத்தின் பெயர்.	குறிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்.)	நிறைவேற்றப் படும் காலம் (ஆண்டு).	நிறைவேற்றும் துறையின் பெயர்.
1.	எல்லிஸ் நகர் விரிவு திட்டமும் மத்திய வணிக மாவட்ட விரிவு திட்டமும்.	500.00	3	தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் பொதுப் பணித்துறை.
2	விளாங்குடி கிராமத்தில் வட மேற்கு டிரக்கு வண்டி நிறுத்துமிடம்.	45.00	3	பொதுப்பணித்துறை.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்.	துணைத் திட்டத்தின் பெயர்.	குறிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்.)	நிறை வேற்றப் படும் காலம் (ஆண்டு).	நிறைவேற்றும் துறையின் பெயர்.
3.	பேருந்து நிலையம், அங்காடி மையம், சுரங்கப்பாதை மற்றும் மேம்பாலம் விரிவு படுத்துதல்.	144.00	3	பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலை ஊரக பணித் துறை.
4.	இஸ்மாயில்புரத்தில் வடிகால் திட்டம்.	13.40	2	தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்.
5.	மூன்றாவது கழிவு நீர் போக்கி சந்தைப் பேட்டையில் அமைத்தல்.	5.65	2	தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்.
6.	மதுரை வடக்குப் பகுதிக்கான குடிநீர் திட்டம்.	45.90	2	,,
7.	நடைபாதை சீரமைப்பு	6.90	2	நெடுஞ்சாலை மற்றும் ஊரக பணித்துறை.
8.	முக்கிய சாலைகளில் கைப் பிடிகள் நிறுவும் திட்டம்.	6.50	2	,,
9.	அவனியாபுரத்தில் வடிகால் திட்டம்.	8.50	2	தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்.
	மொத்த நிதி ஒதுக்கீடு	775.00	3	
	மத்திய அரசு நிதி ஒதுக்கீடு	388.00		
	மாநில அரசின் நிதி ஒதுக்கீடு	387.85		

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS